விடிவெள்ளி 2
Vidivelli விடிவெள்ளி
Friday 20, May 2016 Page 13

அனர்த்த நிவாரணப் பணி

கவனத்தில் கொள்ள வேண்டியவை

பொறியியலாளர் அஸ்லம் சஜா,
விரிவுரையாளர், பொறியியல் பீடம்,
தென்கிழக்கு பல்கலைக்கழகம்

பொதுவாக அனர்த்தங்களின் பின்னரான மனிதாபிமான நடைமுறை பொதுமக்களினது பாதுகாப்பு, உணவு, நீர், சுகாதாரம், இருப்பிடம் என்பவற்றிற்கான அடிப்படை தேவைகளைப் பூர்த்தி செய்தல், சாதாரண வாழ்க்கைக்குத் திரும்புதல் மற்றும் வாழ்வாதாரம் என்பவற்றிற்கு உதவி செய்தல் என்பவற்றை உள்ளடக்கியுள்ளது. தேடுலும் வெள்ளத்தினுள் அகப்பட்டுள்ள மக்களின் மீட்பு நடவடிக்கையும், தப்பியவர்களைக் கண்டுபிடித்தல் உணவு, நீர், மருத்துவம் மற்றும் தற்காலிக தங்குமிட தேவைகளைப் பூர்த்தி செய்தல் உள்ளடங்கலாக அனர்த்தத்திற்கு பின்னர் உடனடியாக செய்யப்படவேண்டிய விடயங்களுக்கு உரிய முறையில் முன்னுரிமை வழங்குவது அரசின் பொறுப்பாகும். அனைத்து அரச சார்பற்ற தன்னார்வ தொண்டு நிறுவனங்கள், தனியார் நிறுவனங்கள், ஏனைய சமூகக் குழுக்கள் மற்றும் இப் பணியில் ஈடுபடும் தனிநபர்களினதும் செயற்பாடுகள் அரசு எடுக்கின்ற நடவடிக்கைகளோடு சேர்ந்து இயங்கும் ஒருங்கிணைக்கப்பட்ட செயற்பாடாக அமைய வேண்டும்.

பின்வரும் அடிப்படைக் கொள்கைகளினால் அனர்த்தத்தின் பின்னரான மனிதாபிமான நடைமுறைகள் வழி நாடாத் தப்படுகின்றன என்பதை அனைத்து அனர்த்த நிவாரண நிறுவனங்களும் இத்தருணத்தில் கவனத்தில் கொள்வது சிறந்தது.

01. மனிதாபிமான ரீதியான அவசியத் தன்மையும் முக்கியத்துவமுமே முதலிடம் பெறவேண்டும். மனிதாபிமானம் என்பது ஒவ்வொரு தனிநபரும் கௌரவத்துடன் வாழ்வதற்கான உரிமையாகும் மற்றும் உயிர்களை பாதுகாப்பதும் இன்னல்களை ஒழிப்பதும் மற்றவர்களுக்குள்ள கடமையாகும்.

02. சாதி, மத நம்பிக்கைகள் அல்லது அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட தேசிய இனம் என்பவற்றைக் கருத்திற்கொள்ளாமலும் எந்தவிதமான பாகுபாடுகளின்றியும் தேவையின் அடிப்படையில் மாத்திரமே நிவாரண உதவிகள் வழங்கப்படவேண்டும். அதாவது பக்கச்சார்பின்மை, தேவையின் அடிப்படையிற் பாகுபாடின்றிச் செயற்படலை குறிக்கும். அனர்த்த நிவாரண நடவடிக்கைகளில் இன மத பாகுபாடின்றி யாருக்கு அடிப்படை தேவைகள் அதிகமாக இருக்கிறதோ அவர்களுக்கு முன்னுரிமை வழங்குதல் அவசியமாகிறது. இலங்கை போன்ற பல்மத இன நாட்டில் மிக இன்றியமையாத ஒரு அடிப்படை கொள்கையாக இது கொள்ளப்படவேண்டும். அனர்த்த நிவாரண நிறுவனங்களும் பணியாளர்களும் தேவையின் அளவு அடிப்படையிலேயே தமது செயற்பாடுகளை திட்டமிட வேண்டும் என்பதே இதன் பொருளாகும்.

03. குறித்ததொரு அரசியல், சமயக் குறிக்கோள்களுக்காக நிவாரண உதவிகள் பயன்படுத்தப்படலாகாது. நடுநிலைமை பேணப்படவேண்டும். ஏதாவது ஒரு குழுவுக்கோ அல்லது மற்றைய குழுவுக்கோ தாம் சார்ந்த குழுவிற்கோ அல்லது தமக்கு அரசியல் ரீதியாக அழுத்தம் கொடுக்கப்படுகின்ற குழுவிற்கோ முன்னுரிமை வழங்காது அடிப்படை தேவைகளின் அளவுகோலின் அடிப்படையில் மாத்திரம் செயற்படுதல் அவசியமாகிறது.

04. கலாசாரங்களுக்கும் சம்பிரதாயங்களுக்கும் நிவாரண பணியாளர்களும் அப்பணியில் ஈடுபடும் நிறுவனங்களும் மதிப்பளிக்க வேண்டும்.

05. நிவாரண உதவிகளை முகாமைத்துவம் செய்வதில் அதில் பாதிக்கப்பட்டோரையும் ஈடுபடுத்துவதற்கான வழிகளை கண்டறிய வேண்டும். அதன் மூலம் அவர்களின் தேவைகளை கேட்டறிந்து அச்சமூக உறுப்பினர்களுடன் சேர்ந்து தமது நடவடிக்கைகளை முன்னெடுப்பது மிக அவசியமாகின்றது.

06. நிவாரண உதவிகள், அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்வதோடு, எதிர் வரும் நாட்களிலோ அல்லது சந்தர்ப்பங்களிலோ ஏற்படக்கூடிய அபாயங்களுக்கான ஜநோய் பரவுதல் போன்ற விடயங்களின் தன்மையிலிருந்து பாதுகாப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்வதாகவும் அமைதல் வேண்டும்.

07. உதவி செய்வதற்கு எதிர்பார்ப்பவர்களுக்கும், அவ்வுதவிகளை நமக்கு வழங்குபவர்களுக்கும் அவ்வளங்களை பெற்றுக்கொள்ளும் பயனாளிகளுக்கும் நாம் பொறுப்புக் கூறுவதற்குக் கடமைப்பட்டுள்ளோம் என்பதை மனதில் கொண்டு எமது நிவாரண நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். வீண்விரயம் துஸ்பிரயோகம் போன்ற விடயங்களிலிருந்து தவித்துக் கொள்ள இது மிக இன்றியமையாதது. அவ்வுதவிகளும் அவற்றை பெறுவதும் அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்ட மக்களின் உரிமையாகும்.

08. எமது தகவல்களிலும், அறிவிப்புக்களிலும் மற்றும் விளம்பர நடவடிக்கைகளிலும், அனர்த்தப் பாதிப்புக்குள்ளான மக்களை கௌரவமானமுறையில் மதிப்பளிப்பதோடு, அவர்களை கௌரவமற்ற முறையில் சித்தரிப்பதையும் தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

09. 'தீங்கு விளைவித்தல்' [doing harm] அல்லது துஷ்பிரயோகங்களினூடாக அனர்த்தங்களினால் ஏற்படும் பாதிப்புக்களை மேலும் எரியூட்டுதல் அல்லது விசேட கவனிப்புக்களுக்காக நிவாரணங்களை திசைதிருப்புதல் போன்ற விடயங்களில் இருந்து தவிர்த்துக் கொள்ளுதல் வேண்டும். அனர்த்த நிவாரண நிகழ்ச்சித்திட்டமிடல்களில் அப்பணியினால் மேலும் தீங்குகள் ஏற்படுவதை குறைக்கும் அணுகுமுறைகளைக் [Do No Harm Approach] கருத்திற்கொள்வதும் மிக முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

10. அரசியல், சமூக கலாச்சார மற்றும் இனப் பின்னணிகளை சரியாக புரிந்து கொள்வதும் அப்பின்னணிக்கு பொருத்தமான வடிவில் தமது செயற்பாடுகளை அமைத்துக்கொள்வதும் ஒவ்வொரு நிவாரணப்பணியாளரினதும் அவர்கள் அவ்விடயங்களை சரியான முறையில் செய்வதை அவர்கள் சார்ந்த நிறுவனங்கள் உறுதிப்படுத்துவதும் அவசியமாகின்றது.

சிறந்த மனிதநேயச் செயற்பாட்டு நடைமுறைகளில் தற்போதுள்ள தகவல்கள், வளங்கள், வழிகாட்டல்களை அடிப்படையாக வைத்தே இது தொகுக்கப்பட்டுள்ளது. தொடர்பாடல்களையும் ஒத்துழைப்பையும் மேம்படுத்தும் நோக்கில் அனைத்து அரச சார்பற்ற நிறுவனங்களும் ஒரு பொறிமுறையின் கீழ் செயற்படுவது இன்றியமையாததாகும். இக்கூட்டு நடவடிக்கை அனர்த்த நிவாரணப்பணியின் ஆரம்பத்தில் மிகவும் சவால் வாய்ந்ததெனினும் ஆகக்குறைந்தது அனர்த்த நிவாரண நிறுவனங்கள் தாம் வேலை செய்யும் பிரதேசத்திற்குரிய பிரதேச செயலகத்துடன் தனது வேலைகள் குறித்து தகவல் வழங்குவது வளங்கள் வீணாகுவதை தவிர்த்து மிக உச்ச பயனை அடைய உதவும். பிரதேச செயலகம் அம்மாவட்டத்திற்குரிய அனர்த்த முகாமைத்துவ நிலையத்துடன் சேர்ந்து அனைத்து நடவடிக்கைகளையும் ஒருங்கிணைக்கும் கட்டமைப்பை ஏற்கனவே கொண்டுள்ளது.

அனர்த்த பின் நிவாரண நடவடிக்கைகளில் பின்வரும் விடயங்கள் முக்கியத்துவம் பெறுகின்றன.

i. முகாமைத்துவமும் ஒருங்கிணைப்பும் :

அனர்த்தங்களின் பின்; எல்லா ஒருங்கிணைப்பையும், கட்டுப்பாட்டையும் பொறுப்பேற்கின்ற அதிகாரமுள்ள ஒருங்கிணைப்புக் குழு எது என்பது தான் இதில் உள்ள முக்கிய விடயமாகும். இது அப்பிரதேசத்திற்குரிய அரச நிறுவனமாகவே காணப்படும். இலங்கையின் அனர்த்த முகாமைத்துவ கட்டமைப்பில் மாவட்ட செயலாளரின் கீழ் பிரதேச செயலாளரே இப்பொறுப்பை செய்பவராவார். எனவே ஏனைய நிறுவனங்கள் பொதுவாக முழு நேரமும் தொடர்ச்சியாக இயங்கக்கூடிய பயிற்றுவிக்கப்பட்ட ஜாழியர்களை செயற்பாட்டில் ஈடுபடுத்தும் போது இவ்வதிகாரமுள்ள ஒருங்கிணைப்புக்குழுவின் திட்டமிடலுக்கு ஏற்ப தமது செயற்பாடுகளை அமைத்துக்கொள்ள வேண்டும். தேடுதல் மற்றும் மக்களை வெளியேற்றும் செயற்பாடுகளில் மிக அதிகமான சந்தர்ப்பங்களில் பொலீஸ் மற்றும் முப்படையினரே போதுமான வளங்களை கொண்டிருப்பதால் அவர்களே இதில் முன்னணி வகிப்பவர்களாக இருப்பார்கள்.

அனர்த்த வேலைகளில் எதிர்நோக்கப்படும் நிலமைகள் மிகச் சடுதியாக மாற்றமடைந்து கொண்டிருக்க முடியும். எனவே அனர்த்த வேலைகளுக்கு பொறுப்பான வர்கள் தொடராக நிகழ்வுகளை மறுபரிசீலனை செய்து நெகிழ்வுத்தன்மையுடன் இருக்க வேண்டிய கட்டாயத்தேவை உள்ளது. பொதுவாக திடீரென ஏற்படக்கூடிய மிகப்பாரிய அனர்த்தத்தின் பின்னர் ஒரு ஒழுக்கற்ற கொந்தளிப்பான நிலை தோன்றுவதற்குரிய நிறைய சாத்தியங்கள் இருக்கின்றன.

ii. முன்னெச்சரிக்கையும், மக்களை வெளியேற்றலும்.

இது எப்பொழுது முன்னெச்சரிக்கை சாத்தியப்படுகிறதோ அந்நேரத்தில் மக்களை வெளியேற்றுவது அவசியமாகிறது. எனவே பாதிக்கப்பட்ட மக்களை முகாமைத்துவம் செய்வது சம்பந்தமான விடயங்கள், போக்குவரத்து மற்றும் பரிமாற்றல் ஒழுங்குகளை ஏற்படுத்துதல், அது சம்பந்தமான விடயங்களை கட்டுப்படுத்தல் என்பவற்றை உள்ளடக்கியதாக, பொருத்தமான வேலை ஒழுங்குகளை உருவாக்க வேண்டும். இதில் பாதிக்கப்பட்ட மக்களையும், சிறுவர்கள் பெண்கள் வயது முதிர்ந்த, சுகவீனமான மக்களை முதலில் வெளியேற்றுவதற்கான ஏற்பாடுகள் மிக விசேடமாக கவனத்தில் கொள்ளப்பட வேண்டும்.

iii. மக்களை பாதுகாத்தலும் இறந்தவர்களை புதைத்தலும் :

பாரிய அனர்த்தத்தில் அகப்பட்டுள்ள மக்களை மீட்டெடுப்பது ஓர் மிக முக்கியமான அவசரமாக செய்யப்படவேண்டிய ஓர் விடயமாகும். இதில் அச்சமூக அங்கத்தவர்கள் ஈடுபடுகின்ற அதே வேளை, அவர்களின் இப்பணியில் பல்வேறு அவசர உதவி வழங்கும் சேவைகளின் பணி மிக அவசியமாக அளிக்கப்பட வேண்டும். இதற்கு கையில் இருக்கின்ற வீடுகளில் பெறக்கூடிய உபகரணங்களும், (கயிறு, விளக்குகள் போன்றவையும்), மிகச் சிக்கலான மீட்புப்பணியில் ஈடுபட பாரிய இயந்திரங்களும் தேவைப்படும். சில வேளைகளில் விசேட வாகனங்கள் (தோணிகள் வெள்ள அனர்த்தத்தில் உள்ளானவர்களை தேடிக்கண்டுபிடிக்க) போன்றவை அவசியமாதலால், போக்குவரத்து பாதைகளையும், ஏனைய வழிகளையும் இயலுமானளவு அவசரமாக துப்பரவு செய்யவேண்டும்.

மத, மற்றும் கலாச்சார தேவைகளையும், உணர்வுகளையும் கருத்தில் கொண்டு இறந்த உடல்களை கண்டுபிடித்து சேகரிப்பதும், புதைப்பதும் சம்பந்தமான ஒழுங்கு முறைகளில் மிக முக்கிய கவனம் செலுத்தப்பட வேண்டும். அதே வேளை இறந்த விலங்குகளை புதைப்பது சம்பந்தமாகவும் அதிகூடிய கவனம் செலுத்தப்பட வேண்டியுள்ளது. ஏனெனில் இது பொது சுகாதாரத்திற்கு பாதிப்பினை ஏற்படுத்துவதனால் இதிலும் கூடிய கவனம் செலுத்தப்பட வேண்டும்.

iv. அவசர நிவாரண உதவிகள் வழங்குதல்:

மிக அவசர நிலைகளில் வேலை செய்யும் போது கீழ்வரும் அடிப்படை தேவைகளுக்கு முக்கியத்துவமளிப்பது மிக அவசியமாகும்.

பாதுகாப்பு
நீர் வினியோகமும், கழிவகற்றல்.
உணவு விநியோகம்
உடை மற்றும் தற்காலிக கூடாரம்.
சுகாதார சேவை மற்றும் ஆரோக்கியம்
இங்கு வளங்களின் மிக நெருக்கமான ஒருங்கிணைப்பும், முகாமைத்துவமும் மிக அவசியமாகும். இவற்றிற்குரிய மிக முக்கியமான முடிவுகள் ஒருங்கிணைப்பு குழுவிலிருந்து பெறப்படும். இவ் அத்தியாவசிய அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்வதற்கு பொது சேவைகள் (நீர் வினியோகம், தொலைத் தொடர்பு வலையமைப்பு, மின் விநியோகம், போன்ற) விநியோக (logistical) வலையமைப்பு கூடியளவு விரைவாக மீளமைக்கப்பட எல்லா நிறுவனங்களும் உதவ வேண்டும்.

ஏனெனில் பாதிக்கப்பட்ட மக்கள் தாங்கள் வாழும் வீடுகளை, வாழ்வதற்குரிய சாதகமான நிலையில் காணாதபோது, வேறு இடங்களில் தஞ்சம் தேடுவது தவிர்க்க முடியாதது. அனர்த்த நிலைமைகளில், அப்பகுதிகளில் காணப்படும் நீர் வளங்களை பாதுகாக்கவும், திருத்தி அமைக்கவும் அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்படுகின்ற அதே வேளை, குடிப்பதற்கும், ஏனைய அனைத்து தேவைகளையும் பூர்த்தி செய்வதற்கு தேவையான மேலதிக நீர் விநியோகம், தேவையைக் கருத்தில் கொண்டு வழங்கப்படவும் வேண்டும். மிக அடர்த்தியாக செறிவாக மக்கள் வாழுவதனால் ஏற்படுகின்ற பாரிய பொது சுகாதார பிரச்சினைகளையும் கருத்தில் கொண்டு, பொருத்தமான சுகாதார மற்றும் கழிவு அகற்றும் வழிமுறைகளும் தேவையைப்பொறுத்து ஏற்படுத்தப்பட வேண்டும். ஆரம்பத்தில் பல சுகாதாரபராமரிப்பு சேவைகளை பாதிக்கப்பட்ட மக்களுக்கு (விசேடமாக காயமடைந்த மக்களுக்கு) வழங்க வேண்டிய அவசிய தேவை இருக்கிறது. இது அப்பகுதியில் வழமையில் இருக்கின்ற சுகாதார சேவைகள் அதிகரிக்கப்பட வேண்டிய அவசியத்தையும், அது பாதிக்கப்பட்ட பகுதிக்கு வெளியிலும், ஒன்றிணைந்த சுகாதார சேவை வசதிகள் அதிகரிக்கப்பட வேண்டிய அவசியத்தையும் கொண்டிருக்கிறது.

(16 ஆம் பக்கம் பார்க்க)